மேடாதியாக விலக்கணமொழிந்த விராசி யெத்தனையோ வவையே இராசியாம் இலக்கணத்திற் சென்ற நாழிகையை விநாடியாக்கியதை மேடமீனமாயின் 7-லும் இடபகும்பமாயின் $6\frac{1}{4}$-லும் மிதுனம், சிம்மம், மகரம், விருச்சிகமாயின் $5\frac{3}{4}$-லும், கடகந் தனுசாயின் ஐந்தேமுமுணுவிசத்தாலும் கன்னி துலாமாயின் 6-லும் பெருக்கக் கலைகளாம், அப்படியாகிய கலைகளை 60-வதால் வகுக்க பாகையம்.

வரலாறு.

குளிகன்-புதன்கிழமை சனனமானதாலு மன்றுபகல் நாழிகை 14 க்கு குளிகனுதயமானதாலும் கடகத்தில் பாக்கி நாழிகை 3-18 சிம்மம் $5\frac{1}{4}$-கன்னி 5, ஆக நாழிகை 13-33 க்குமேல் துலாமானதாலு மதில்செல்லுவிநாடி 27, ஆதலானு மிதை 6-ல் பெருக்க 162 ஆம் இதை 60-ஆல் வகுக்க ஈவு 2-ம் மீதி 42 ஆகவே பாகை-2 கலை 42-ம் மேடாதிபாகமென்ற விராசி 6-மாம்.

2. அர்த்தப்பிரகரன், புதவாரம் பகல் 2-நாழிகைக்கே அர்த்தப்பிரக னுதயமாவதால் கடகலக்கினத்திற் செல்லு நாழிகை 2-12 இத்துடனுதித்த நாழிகை 2-யுங் கூட்ட 4-12 இதை விநாடியாக்க 252-ஆம் இதை ஐந்தே மூணுவிசத்தால் பெருக்க $1307\frac{1}{4}$-ஆம் இதை 60 ஆல் வகுக்க ஈவு 21-ம் நிச்சம் $47\frac{1}{4}$-ம் வருவதால் பாகை

21-கலை 47-போக விகலை 15-ம் மேடாதியாகச்சென்ற விராசி 3-மாம்.

3. எமகண்டன்-புதவாரம் பகல் நாழிகை 6-க்கு எமகண்டனுதயமான்தால் கடகத்தில் பாக்கிநாழிகை 3-18 சிம்மத்திற் செல்லுநாழிகை 2-42 இதை வினுடியாக்க 162 இதை 5 அரிக்காலால்-பெருக்க 931½ இதை 60 ஆல் வகுக்க ஈவு 15-ம் மிச்சம் 31½யுமாதலால் பாகை 15 கலை-31 விகலை 30-ம் மேடாதியாகச் சென்றவிராசி 4-மாம்.

4. காலன்-புதவாரம் பகல்நாழிகை 18-க்கு காலனுதயமானதால், கடகத்தில் பாக்கி 3-18 சிம்மம் 5-15 கன்னி 5 துலாத்தில் செல்லுநாழிகை 4-27 இதை வினுடியாக்க 267 இதை 6 ல் பெருக்க 1602 இதை 60 ல் வகுக்க ஈவு 26ம் மிச்சம் 42. மாதலால் பாகை 26 கலை 42-ம் மேடாதியாகச் சென்றவிராசி 6 மாம்.

குளிகாதி நால்வர் பாதசாரஸ்புடம்.

கிரகம்	இராசி	பாகை	கலை	விகலை	சட்சத்திர	பாதம்
குளிகன்	6	2	42	0	சித்திரை	3
அர்த்தப்பி	3	21	47	15	ஆயிலியம்	2
எமகண்ட	4	15	31	30	பூரம்	1
காலன்	6	26	42	0	விசாகம்	3

தூமாதியைவர்—சூரியஸ்புடத்தோடு 4 ராசி 13-பாகைக்கூட்ட தூமன் ஸ்புடமாமதி விராசிமான சங்கையாகிய 12-ஐ கழிக்க வந்த சேடம் விதிபாதன் ஸ்புடமாமத்துடன் 6 ராசிகளைக் கூட்டப் பரிவேடன் ஸ்புடமாமதில் 12-ஐ கழிக்க வந்தசேடம் இந்திரதனு ஸ்புடமா மித்துடன் 17 பாகைக் கூட்ட உபகேது ஸ்புடமாமிதோடு 1 ராசியைக்கூட்ட முன்போல் சூரியஸ்புடமாம்.

வரலாறு.

முன்னர் யாமொழிந்தவா றிதற்கு சூரியஸ்புடம் இராசி 3, பாகை 11, கலை 20, ஆதலாவித்துடன் மேற்காட்டிய வண்ணம் பெருக்கிக் கழிக்க அடியில்வருமாறு காண்க.

தூமாதியைவர் பாதசார ஸ்புடம்.

கிரகம்	இராசி	பாகை	கலை	விகலை	நட்சத்திரம்	பாத
தூமன்	7	24	20	0	கேட்டை	3
விதிபாத	4	5	40	0	மகம்	2
பரிவேட	10	5	40	0	அவிட்டம்	4
இந்திரத	1	24	20	0	மிருகசீரிட	1
உபகேது	2	11	20	0	திருவாதி	2

		இந்திர தனு	உப கேது			விதி பாத	காலன்
பரி வே	தூமாதி இராசி		அர்த்தப்பிரகன்	தூம	தூமாதி அம்சம்		
			விதி பாத எமகண்ட	உப அர்த்			இந்திர எமகண்ட
	தூமன்	ல-கா குளி			பரி	ல-குளிகன்	

இராசியாங்களுக்குரிய லக்ஷணங்களே இவைகளுக்கு முரியனவாம்.

பாதசாரஸ்புட விபரத்திற்கு 8-9 பக்கங்களைப்பார்க்க சூரியனுக்குக் காலனும், சந்திரனுக்குத் தூமனும், செவ்வாய்க்கு பரிவேடனும் புதனுக்குக் கர்த்தப்பிரகரனும், குருவுக் கெமகண்டனும், சுக்கிரனுக்கு விதிபாதனுஞ், சனிக்குக், குளிகனும், இராகுக், கிந்திரனும், கேதுக்குபகேதும், பிள்ளைகளாம்.

மேற்கூறிய தற்கால கிரகநிலையில் காட்டிய சூரியசந்திரானை சுத்தஸ் புடமாகச் செய்திருக்கிறோம்.

கிரகங்களின் நட்பாச்சி யுச்ச முதலிய விராசிகளேயும் சத்துரு மித்துரு கிரகங்களேயு மறியுமாறு.

கிரகமும் பார்வையும்.	ஆட்சி.	உச்சம்.	நீச்சம்.	நட்பு.	பகை.	சத்துரு கிரகம்.	மித்துரு கிரகம்.	சமக்கிரகம்.	மூலத் திரி கோண
சூரி, 7	சிம்மம்	மேடம்	துலாம்	தனுசு, மீனம்	ரி,மி,கட,க,வி ம, கு	சு, ச, ரா கே	சா, செ வி	புதன்	சிம்மம்
சந்தி, 7	கடகம்	இடபம்	விருச்	கன்,த,மீ,மி	மே,சி,து,ம,கு	ரா, கே	சூ, புத	வி, சனி சு, செ	இடபம்
செவ்வா 4, 7, 8	மே, வி	மகரம்	கடகம்	ரி,மி,கன்,து	சி,த,கு,மீனம்	புதன்	சூ, சந் வி	சு, சனி	மேடம்
புதன், 7	மி, கன்	கன்னி	மீனம்	த,ம,கு,மே,ரி கடக,து	சிம்மம், விரு	சந்தி	சூரி, சு	செ, சனி வி	கன்னி
வியாழ 5, 7, 9	த, மீன	கடகம்	மகரம்	ரி,மி,சி,கந்,து	மே,விரு,கும்	புத, சுக்	சந், சூ செ	சனி, ரா சே	தனுசு
சுக்கி, 7	இட,து	மீனம்	கன்னி	கு,மே,மி,வி த, ம	கடகம்	சூரியன்	புத, சனி	சந், செ வி, ராகு	துலாம்
சனி, 3 7, 10	ம, கும்	துலாம்	மேடம்	மீ,மிது,கட,ரி கன், தனுசு	கடகம்	சூ, சந் செ	சுக், புத	கேது ரா, கே	கும்பம்
இரா, 7	கன், மி தனுசு	விருட்சி	இடபம்	மீ,து,மகரம்	சி,கட,மேட	சூ, சந்தி செ	சுக், சனி வி	புதன்	கும்பம்
கேது, 7	மீ,கு,ம ரி,துலா	மிதுன	தனுசு	மேடம்	சிங்கம், கடக	சூ, சந்தி	சனி, சு செ	பு, வி	விருட்சி
குளி, 7	க, தனு	மகரம்	கடகம்	து,கு,மீ,மிது	ரி,சி,மே,விரு	,,	,,	,,	,,

இன்னநதிதீரத்திலுற்பவமென்பது.

இன்னவாறின்னகோட்க ளிருந்திடிலின்ன தீரந்
தன்னிலேபிறப்பாரென்று தத்துவமறிந்தமேலோர்
இன்னமுமடியேனின்றி யிருங்கடனுலகுதன்னின்
மன்னியமக்கடாமு மறிந்திடமொழிதல்வேண்டும். 1

குந்திதன்பேராக்கேண்மோ கூறுமைந்தாதியோடு
நந்தலிற்பாக்கியாதி நளிர்மதிக்கேழோன்பானும்
வந்திடசரங்கடம்மில் வான்மதிபிருகுகாரி
அந்தமினோக்காங்குற்றா லறிந்திடாய்க்கங்கையோரம். 2

பிறைமதியிரவிபார்வைப் பெற்றுமேபாக்கியந்தன்னை
கறையுறுதீக்கோணோக்கக் கங்கையினதிதூரத்திற்
சிறியவூரதிற்பிறப்பான் சிறந்தநற்குருவுமேழோன்
செறிவுறுபார்வையுற்றாற் செப்புவாயெமுனைதீரம். 3

பொன்னவளிந்துவோடு பொருந்தியேசாத்துயேழிற்
கன்னவிற்றேளாய்நிற்கக் கலைமகள்தீரமன்றி
வின்னமாங்காரியோடு விரிதிரலாபமாயின்
நன்னறுமதையாமென்னு நளிற்புனற்றீரமாமே. 4

மாராகுமதிக்கேயேழின் மன்னவன்பார்வைபெற்று
ஆறேழெட்டீரைந்திற்கே யதிபராமிவர்கடாமுங்
கூறாகவிருக்கிற்பார்க்கில் குளிர்நதியோரமென்க
வேராகுமதியின்பார்வை வேந்தனேக்ஷீரமாமே. 5

கருதருங்காரிபுந்திக் கவினுறசாத்துளேழிற்
பொருந்தியேயிருக்கக்ஷீரம் போந்திடுந்தலங்களின்றிக்
கருமத்திற்கதிபனேழோன் கலந்திடிலிரண்டோனோடுப்
பெருகியக்ஷீரமென்றுப் பேசிடுந்தீரமாமே. 6

வேறு.

திருவுறுமொன்பான்றினகரன்றனக்குத் திரமொடுவுபயமாகிடிலோ
பொருவிலாகாவேரியருகினிற் சிறந்தபுரவலனாண்ட பூவெனலாம்
மருவிலாவேழோன் மதிதனக்கேழின் மன்னியதிரமுறிற்பவமாம்
பொருவரற்போக்கும் பொன்னிகாலருகே பொருந்து சிற்றூரத்திற்
[பிறப்பான்.

வே று.

என்றுகதிர்மதிகுருவுஞ்சரத்திருந்துயெழிற்சனியினுற்பார்க்கப் படினுமன்றி, துன்றுகுளிர்மதிக்காங்கேழாதிநல்ல துறைபாக்கியாதி வுபயத்திருந்து, நன்றுறவேபார்த்தாலுநதியின்மிக்க நன்மையுறு முபயகாவிரியில்வந்து, ஒன்றுறவேபிறப்பனெனநந்திதானு முண் மையாயுறைத்தமொழியுரிதியாமே. 8

வே று.

பத்தேழாமிருமூன்றேனும் பகர்ந்திடுங் * கர்ப்பமாயின்
தத்துறவில்லாதோங்குந் தகைவுடைகருடதீரம்
பித்தனன் முடியின்மேவும்பிறைக்கீரைந்தில் † வான்மீகம்
அத்தினகரன்றுனற்று லமராவதியென்றேதே. 9

நிலமகன்பாக்கியாதி நேசமாய்க்கூடிப்பத்தில்
வலுவுடனிருக்கவைகை வயங்கறுகினிலேபன்றி
நிலவினுக்கேழாமாதி நிகழ்சரம்பத்துணின்றால்
குலவியத்தாம்பிரவருணிக் குறியுடைத்தீரமாமே. 10

பத்தேழாமிடத்துக்குள்ளோர் பகலவன்சகிதமாகி
நத்திடக்கர்ப்பராசி நலமுருதாம்பிரவருணிச்
சுத்தியதலங்களன்றி சுந்தரமதிதான்கர்ப்ப
மொத்திடக்குமரியென்னு முயர்நதிதீரமாமே. 11

பிரசவக்கிரக முதலியதித்தகைத்தென்பது.

சரராசிதனிற்பிறக்கிலிருபாற்சந்து தரணிதனிற்றிராசியாகின் வேந்தே, பரவியேவிருபக்கமனையதாகும் பகருபயமெனில்வீதிபிரி வுமூன்றாந், திரமொடுமன்னன்பார்வையடைந்திருக்கிற் செல்வீகனத் திசையிற்சிறந்தகோயிற், பரவுமனையிருவருடபாகமென்று பாலற் கிப்பலன்கள்தமைப்பரிவாயோதே. 12

பரிவோடுவாக்காதிபதியேழோன்கூடிப் பார்த்திடிலோபகர்கங் கையருகிலுண்டாந், தெரிவதினிப்பத்தாதிஜென்மத்தாதி சேர்ந்த பாக்கியந்தனிலேதிரமாய்க்கூடில், அரியவருமதிகாரியருகிலுண்டா மவனிதனிலாலயங்களடங்தேநிற்கும், பிரியமதாமிருமனையுமேகமா கப் பெற்றதோனனுபவிப்பனென்றுகூறே. 13

வே று.

மதித்திடன்மன்னனேகேண் மைந்தனேபிறந்தகாலம்
பதிதனிலிரவிபுந்தி பார்வையேமதிக்குண்டாகிற்

* கர்ப்பம்—உபயராசி. † வான்மீகம்—திராசி.

கதித்தநற்கன்னியோடு கருதியவைந்துமாதர்
விதிப்படியிருப்பரென்று விளம்பினர்நந்திதானும். 14

ஐந்துபேரென்றுமொத்த மறைவதெவ்வாறுசொல்லும்
விந்தையாமரசேகேணீ மிகுமதிதனக்குநான்கில்
வந்தகோடன்னைக்கொண்டு வருநிலையுரைத்தல்வேண்டும்
சுந்தரன்பிறக்குங்காலஞ் சுகமிலையின்னுங்கேளாய். 15

கேளதின்மன்னன்காரி கிளர்மதிதன்னோடங்கு
தாழ்விலாசகிதபார்வைத் தானுறினான்குபேராங்
கோளமங்களமேயொன்று கூறவேவேண்டுமன்னா
பாழிலைவிபரமெல்லாம் பற்றியநான்காற்சொல்லே. 16

சொல்லுவதாவுசெவ்வாய் சூழ்ந்துமேப்பார்வையாகில்
தொலையாமூன்றுபேருட் சுதன்பிறப்பானாமிக்க
வல்லபபிருகுவோடு வளர்மதிகூடிநின்றால்
இல்லதிலிரண்டுபேர்க ளிருந்தனர்சுமங்கிலியாமே. 17

சரமதிலுடற்றானாதி தங்கியங்கிருப்பானாகில்
உரமுளகூடந்தன்னி னுதித்தனன்றிரமேயாகிற்
கரமுளவறையிலீனங் காட்டுமன்னிலையிற்றானே
வரமுளவுபயமாகில் வந்துதித்தனன்முத்தத்தே. 18

வேறு.

இரவியொன்பான்மதியுடனே யினிதாய்க்கூடிக்கண்ணுற்றால்
பரவுகெங்கையோரமதிற் பற்றியிருப்பானவன்றந்தை
திறமேசெவ்வாய்தான்கூடித் தேர்ந்துபார்க்கில்நாற்காலாற்
குறைவொன்றில்லைதலபேதங் கொண்டான்மகரத்திசையெனலாம்.

வேறு.

நன்மையாம்புந்தியோடு நாடியங்கிருப்பாராயின்
மென்மையாயிருவரோடு மிகுநிலவியாபாரத்தால்
தன்னிகரில்லாலாபஞ் சார்ந்திடச்சென்றானென்க
தின்மையவ்வாறுநட்பார் சிறப்பிலையென்றுகூறே. 20

மன்னனோடடுத்துநிற்கில் வருமாலயத்துட்சென்றான்
வின்னமில்லாதசுக்கிரன் மிகுதியங்குறிலோவன்னிய
தின்மையாம்பெண்ணைத்தேடித் தியக்கத்தாற்சென்றானென்க
வன்னமாநீலனாகில் வாணிபஞ்செய்யச்செல்வான். 21

ஆகவேயராவுதன்னோ டமர்ந்துமேநிற்பாராகிற்
பாகமாம்பூமிதன்னுற் பற்பலவழக்கேநேர்ந்து
சோகமாங்கலகஞ்சத்துரு துயரமேயடைந்திருப்பான்
வேகமாங்கேதுகூடின்மிகுரோகம் வயற்றிலுண்டாம். 22

வேறு.

மேடமரிசிலைதனிலேவெய்யோனிற்கின் மிக்கமேற்றிசைச்செல்வன்றந்தையென்க, தோடமிலையேறுகன்னிமகரந்தன்னிற் றெடுத்துநிற்கில்வடமேற்காந்துலையிலல்ல, தேடவேமிதுனதுலாங்கும்பந்தன்னிற் றேர்ந்துநிற்கில்வடகீழ்பாற்றேறிச்செல்லல், கூடவேகடகந்தேண்மீனமாகிற் குறிப்பாகத்தென்கிழக்கென்றெடுத்துக்கூறே. 23

வேறு.

மறிகடகங்கோல்மானிதில்ஜனித்தால் மன்னனேயன்னியர்மனையாம்
செறிவுறுமதனிற்பாபிகளிருக்கிற் சிறப்பிலையம்மனைப்பாழாம்
நெறிசுபர்பார்வையிருந்திடிலம்மான் நிலைகுடும்பத்தினிலுதிப்பான்
குறியொடுசுபரும்பாபருமிருக்கிற் கூறியமனையிரண்டுளதே. 24

வேறு.

கண்டிடமிதுனங்கன்னி காண்டீபமீனந்தன்னில்
துண்டெனுங்கற்பராசி சுகமுடன்சனித்தபேர்க்கு
கொண்டபூர்வீகபேதங் கொள்மனைபெண்ணின்மூலம்
மிண்டியவிபகாரத்தால் மிகுபொருள்சேர்வதாகும். 25

மேவியேவிடையேசங்க மிக்கதேட்குடத்திற்றுனே
தாவியேபிறப்பாராகிற் றந்தையின்சுயராச்சியந்தான்
பாவிகள்பார்வையாகிற் பற்றியபூர்வநாசம்
வாவிகாணருகிற்கோயில் வனுவுடனிருக்குமன்றே. 26

சார்ந்திடுங்கன்னிமீனந் தனுசுகண்டதிற்சாத்மீகம்
நேர்ந்திடுந்தேளாடேறு நேர்துலைராசதந்தான்
சார்ந்திடுமிதுனகும்பஞ் சாற்றுமானறியேயாகில்
தேர்ந்ததாமதமேயாகுஞ் சிறப்பிலைமரணமாமே. 27

சர திரோபய விராசிகளிற் சூரியாதி நவக்கிரகங்கணின்ற பொதுப்பலன்.

இரவிநின்றபலன்.

கன்னியாழ்சிலைமீனத்திற் கதிர்நிற்க ஜனித்தபேர்க்கு
விண்ணமாநேத்திரதோடம் மிக்ககல்வியனுஞ்செல்வன்
மன்னனேமறியுநண்டு மகரமான் துலையிநிற்க
உன்னியதருமங்கீர்த்தி யுற்றிடுமியோகவானே. 28

யோகவானுபயந்தன்னி லுற்றவெய்யவனேநிற்க
பாகமாமனையைவிட்டுப் பகரன்யமனையிருப்பான்
வேகமேநடையில்வல்லான் மிக்கவேதியர்கணட்பன்
தோகையர்மிகவுஞ்சூழச் சுகமனுபவிப்பனுமே. 29

வேறு.

அரிதேளாங்குடமிடபமிரவிநிற்கி லாயுளதுதீர்க்கமுளனறிவு மேன்மை, தெரியவலனன்னியராற்பொருளுங்கூடுஞ் சிறப்புடையன் பூமியினுற்செல்வமுள்ளான், உரியமன்னவர்நேயன்யோகவானு முண்மைவித்தையுடையவனுமெனக்கண்டோது, பிரியமுடன்தெய்வபக்தி மேன்மையுள்ளான் பிரபலனுஞ்சௌக்கியங்காண்பெருமையோனே.

மதிநின்றபலன்.

கடகமதில்வளர்மதியேநின்றிடிலோநன்மை கலைதுலையாமாடதிலேநிற்கத்தீதாம், திடமிலையன்னைக்குநலியாகுந்தேகஞ் சிரப்பில்லைபூர்வம்விட்டுபிறிதிற்காட்டும், விடைமாதர் தமைக்கூடிவேதனைகள்படுவன் மேதினியிற்றேய்மதிக்குச்செல்வமிகவுளனும், உடையாடையணியவலனுண்மையுடையவன்கா னுற்றமனையாள்தழியிற் செல்வமுளனல்லான். 31

சடலமதிற்பிணியிலான்யோகியர்கணட்பன் சாந்தகுணத்தன் மையொடுதனித்துவருந்தொழிலான், கடகமதிலமரமதிக் கரிட்டமது கண்டாற் கருதுசுகமில்லையதிற் கடனதிகப்படுவன், மடைதிறந்தபுனலெனவே யன்பதேசத்தின் மாறிவருந்தலபேத வலுவுடையசெல்வன், தடையில்லையன்னியராற்பூமிநிதிசேர்க்கை தனசவுக்கியமுள்ளவனுந்தன்மையிதுவாமே. 32

திரமென்னும்ராசிதனிற்றேய்மதியேநிற்கச் செனித்த ஜாதகனுடையதிறமையதுகேளாய், உரம்பாக்கியஞ்சேரு முண்மையது

பெண்பாலுற்ற துணையாற்பாக்கிய மென்பரிதுகண்டாய், விரவியமந் திரியரசர் மகிழ்ச்சியுள தாங்கே மேதினியில்யோகமுள நன்றியிச் செல்வன், பரவியசஞ்சலமுடையன் கோபியெனலாகும் பலர்பெண் ணைபரவி யனுபவிப்பனெனக்கூறே. 33

வே று.

திராசியதனில்வளர் மதியேநிற்க ஜெனித்தோன் றன்றிறமை யது செப்பக்கேளாய், விரவியவாதீனமதுவேறுஞ் செல்வமிகுத்திடு மே சுயார்ஜிதங்கணிலேயாமன்றி, பரவியமன்னவர்நேயன் யோகிநட் பாம் பலவித்தைமேலோராற் பெருகிநிற்கும், திரவியமும் விரையம தாஞ்சகோதிரங்கட் சிறந்திருப்பாரந்தியத்தி லென்றுசெப்பே. 34

சிறந்தவளர்மதிவுபயராசிதன்னிற் சிறந்துநிற்கிற் செல்வீகன் பெண்பால்தன்னால், பிறந்தமனைபாழாகு மூன்றும்பூமி பிலனென்ப ரிருபாகம் பூமியோகன், வரந்தனிலுந் தத்துவபுத்திரனுகுஞ் செல் வன் வாலிபத்திற் சுகமுடித்தம்மனையிற்கூடி, யிருந்தவர்க் கன்னியர் கர்மஞ்செய்வனன்றியெழிலரசர் மெச்சும்வித்தையினிதுள்ளோனே.

கொண்டவுபயந்தனிற்றேய்மதியேநிற்க குறித்தஜாதகரின்றன் பலனைக்கேண்மோ, கண்டிடுவாயோகமுளான் கன்னியரின்பகைளுன் கருத்துடையர்தமைக்கூடி கனமாகவாழ்வன், உண்டாகுமன்னவராற் செல்வீகன்தான்யோகியர்கடமைக்கூடுமுண்மையாளன், தொண்டர் களை யெஞ்ஞான்றுஞ்சேர்ந்துநட்பாய் சூழ்ந்திருப்பனியோகியெனச் சொல்லலாமே. 36

செவ்வாய்நின்றபலன்.

பலமெனுஞ்சாத்தினிலமகன்நிற்கப் பற்றியேபிறந்தஜாதகன்றன் குலமதிற்சிலனரசனைபோலக்கொள்கை காணியோகவான்சத்துரு கலகிகாண்களத்திரதேகமேநலியாங் கனமுடன்பொருளுளனென்க விலகியேபூமியன்னியதேச மேவுவன் சுகமுளனிவனே. 37

வக்கிரன்திரத்தில் நின்றிடில்பூமி வலுவொடுசுயார்ச் சிதமேன்மை தக்கவன்செல்வன் யோகவான்தாரந் தரணியிற் பகையுளதாகும் பக்குவமுடனே யன்னியர்தமக்குப் பலவிதத்திலு மிருநட்பா மிக்கபாதகனு யன்னியதேச மேவியேயிருப்ப னென்றுறையே. 38

வே று.

கூறக்கேணிலமகன்று னுபயமாகிக் குலவிநிற்கும் வேளைதனிற் ஜெனிப்பாராகில், மாறக்கேள் பூருவம்விட்டன்னிய தேசமாறியே கன்னிதிசைமருவிநிற்பன், வேறுகாமனதுள்ளும் பகையேகாட்டு

மேதினியிலிருவித்தைநிலத்தாற்செல்வங், கூறுசுயார்ஜிதபூமிஸ்திர
முன்சொன்ன குறியானகன்னிதிசைகுணமென்றோதே. 39

புதன்நின்றபலன்.

புந்தியேசரத்தினின்றிடப்பிறந்தோர் புத்தியும்பெண்சுகமுடையார்
வந்திடுமரசர்பேட்டியாமகிழ்ச்சி மன்னவருறவெனலாகுஞ்
சந்ததிபேதம்பெண்ணுள தந்தியஞ் சார்ந்திடுங்காலத்திற்புத்திரன்
விந்தையாம்பூமிசுயார்ச்சிதநிலைமை மிக்கசெல்வீகனென்றோதே. 40

திரமதுதன்னின்மாலுமேநிற்க ஜெனித்தஜாதகர்க்கினிப்பலன்கேள்
உரமெனும்வித்தைத்திரவியலாப முண்மையாமரசரான்மகிட்சி
பரவியபூமிபுத்திரலாபம் பலதொழில்தன்னினுமுயற்சி
காமதுதன்னிற்றழும்பதுவிரணங் கருதுவர்நிலைமையிவ்விதமே. 41

உருதியாமுபயராசியிற்புந்தி யுற்றஜாதகர்க்கினிபலன்கேள்
கருதியமெய்யன்யோகியநட்பன் கவிதைகட்கணிதநூற்கற்பன்
இருநிலையுடையளினியதர்மங்க ளிடரிலாதியற்றிஞானியர்பால்
பெருகியநட்பனன்னியர்நேயன் பெந்துகட்பகையுளனுமே. 42

குருநின்றபலன்.

மன்னன்சரத்திற்றானிருக்க வனுவாய்ப்பிறந்தஜாதகர்க்கு
துன்னுமேன்மையதிகாரஞ் சுயவார்ச்சிதமேநிலைமையதாங்
கன்னன்மொழியாணட்புடையன் கன்னிதிசையிற்பூர்வீகம்
அன்னைவழியாற்செல்வீக மாறைந்ததனிற்புத்திரனுண்டே. 43

சிறந்ததிரத்திற்குருவிருக்கச் செனித்தபாலன்றிறங்கேளும்
பிறந்தநிலமைவிட்டேகும் பெரியோர்கூட்டமுண்டாகுஞ்
சிறந்தவன்னைவழித்துக்கஞ் செல்வமுண்டாம்பதினறில்
அறமுந்தெய்வபத்தியுளா னரசர்மகிட்சியுடையவனே. 44

மந்திரிவுபயந்தன்னிலேயிருக்க வந்தஜாதகர்க்கினிபலன்கேள்
தந்திரமனத்தன்பெண்களாற்றனமுந்தரணியிற்றனியனுயிருப்பான்
முந்தியபூர்வபூமியால்வழக்கு முற்றிலும்வியாச்சியமில்லை
சந்ததிவிர்த்திதருமத்திற்புத்தி சார்ந்திடுந்தாக்ஷணியமுளனே. 45

சுக்கிரநின்றபலன்.

வெள்ளியேசரத்தில்நின்றஜாதகர்க்கு மேதினிதன்னிலேபெண்பால்
தெள்ளியசுகத்தன்தேககாத்திரனுஞ் சிவார்ச்சனைசெய்யவும்பிரியன்
புள்ளியாங்கல்விபுண்ணியன்பூமி பொருமையாம்புத்திரநட்பன் [லே.
துள்ளியதுட்டர்தம்மையேயடக்குஞ் சொல்லுடையவனெனச்சொல்

சுங்கனே திரத்தினின்றஜாதகர்க்கு சுயார்ச்சிதபூமிநல்வாக்கு
பங்கமில்லா தான்மன்னவர்னேயன் பகர்புவிதன்னியோகியரைச்
சங்கையில்லாமற்சார்ந்துமேதிரிவன் தரணியில்யோகசித்தியனுஞ்
செங்கையாள்கிருபையுடையனுமெய்யன் திரமுடைவித்தையுள்ளவனே. 47

சுக்கிரனுபயந்தன்னிலேயிருக்கிற் சுகமொடுவித்தையுள்ளவன்காண்
தக்கவன்சத்துருஜெயமுளானரசர் சார்ந்திடச்சவுக்கியமுளனும்
மிக்கசெல்வீகமுடையநன்மனத்தன் மேதினிதன்னினற்குணவான்
துக்கசிந்தையனுந்துறவிகணட்பன் சுகமெலாம்பேதகமாமே. 48

சனிநின்றபலன்.

நிலைமையாஞ்சரத்தினிலனேயிருக்கில் நிலையோடாதீனமேபேதம்
பலனிலையன்யதேசசஞ்சாரம் பாலற்கேபூமியும்விரையும்
தலமதைவிட்டேயன்னியதேசந் தநஞ்சுயார்சிதமதுபெறுவன்
பெலமொடுசெல்வமுண்டதிகாரம்பெண்ணினுற்கலகமென்றேதே.

சனிதிரத்திருக்கின்மன்னவர்நேயன் சஞ்சலமனத்தினையுடையன்
இனியநற்குணவானிருவித்தையுடைய னின்பமாமன்னியதேசந் [யே
தனியனும்வர்க்கந்தன்னிலேபகைத்து சஞ்சலத்துடனன்னியர்தனை
கனிவதாய்கூடிச்சனம்பொருள்தேடிக் கதித்ததர்மத்தினைசெய்வான்.

காரியேயுபயந்தன்னிலேயிருக்கிற் கடினமாந்தொழிலிருவிதத்தால்
மீறியேயிருவர்பூமியைவாங்கல் விரையமாதீனமேசுபங்கள்
தேறியமனையாள்வர்க்கமேதோடஞ் ஜெகமதிற்புத்திரசெல்வங்
கூரியபுத்தியாகபூர்வீகங் குணமொடுகூறியநட்பே. 51

தற்சிறப்புப் பாயிரம்.

குறள் வெண்செந்துறை.

முப்பரம்பொருட்கு முதற்பொருள்யாதுமே
லப்பொருள்கிறீஇ அறைகுவன்மேடமே.

மேடோதயம்.

மேஷமென்ற லக்கணந்தா னுதயமாகில் விளங்கியதோர் கிழமேற்கு வீதியாகும், பாசமென்ற குளங்கேணி யெதிராய்த் தோன்றும் பரிவான வாலையமும் வாயுவக்னி, நேசமுடன் வாசலதுதெற்கேயாகும் நேரிட்டவகமதுவும் பாழேயாகும், வாசமுட னிருபுறமுஞ் சந்துதோன்றும் வழுத்தினேன் கண்ணுதல்தான் வகுத்தநூலே.

மேடத்திற் கிரகங்கணின் ற பலன்.

இரவிநின்றபலன்.

இரவிகேந்திரமுச்ச மாகிநிற்க வினியசுகமிலை யைந்துபுத்திருண்டு, திரமம்மான்வர்க்கமது யைந்தேயாகுந் தோஷத்தால் தநயரிலைதத்தெடுப்பார், வரபிதுர்மாதனவான் ருழ்விலைவைந்தான் வருமேழாமிடனேக்கால் களத்திரரோகம், இரவிகேந்திரகோண மேறில் யோகம் யினர்சேர்ந்திடின் மிக்கதோஷமாமே. 52

இரவிகேந்திரமுச்சமாயிருக்க யெவ்வாறுதாழ்வென்றீரெடுத்துக் கூறுங், திரத்தாதிபாக்கியத்திலிருப்பதாலே தீதாகுமாரகத்தைத் தருவனன்றி, வருமேழாமிடமதனைப்பார்ப்பதாலும் வாழ்க்கைத்துணைரோகமதையடைவாளென்க, குருவேழாமிடமிருந்துநோக்குமாயின் குய்யமதின்மாருதரோகமுண்டாம். 53

வேறு.

கலைமதியுடனேபூமிக் காதலன்கூடியேழில்
நிலைபெறவிரும்பானுகி னிகழ்ந்திடும்பலனையோதும்
நலமிலாவேழுக்கேழோ னற்கர்மத்தானனேடு
பெலனுறவிருப்பதாலே பேசுவாய்ப்பாரிதோஷம். 54

மதிநின்றபலன்.

கலைமதிமேடம்பகையாய்க்கதித்துநிற்கக் கனிவுளவன்னைக்குசுகந்தாழ்வாநதேகம், மெலியுந்தேய்மதியாகிற்றனக்குச்சற்றும் மேன்மைசுகமில்லைபலயீனமாகும், நலமுளபாக்கியனுக்ஷியோடிருந்து நாடிப்பார்த்திடவரசர்சமானனுகுந், தலமதிலேசெல்வமுளனிவனுமென்று சாற்றினர்நந்திசர்தரணிவேந்தே. 55

செவ்வாய்நின்றபலன்.

கருதரியமேடவிராசியினிற்செவ்வாய் கதித்திருப்பிற்பொன்னிரஞ்சாதகனுக்கன்றி, இருவருடற்பிறப்பாகுமொத்தேவாழ்வாரிடைவரையிலியோகமிலையாயுள்தீர்க்கம், வருமாக்கமாறிவிடுநன்மையோனும் மதிக்கினீரைந்துக்கப்பாலோர்கண்டம், உரியநன்மனைவிபகையாவள்வந்தே யுதித்தமக்கண்மிகுபொருளுக்குரியராமே. 56

ஏந்திழையாள் பகையாவளென்றுரைத்தீ ரேதுகாரணமதனையெந்தாயோதுங், காந்துசெய் களத்திரத்தானத்தைநோக்கக் கலகமும்பகையுமெனக் கழறல்வேண்டும், போந்துசுபர்பார்வையதிற் பொருந்துமென்னிற் புன்மைதீர்ந்துயர்நன்மை யாகுங்கண்டாய்,

பாந்தளோடிரவிசனி பார்க்குமாகிற் பாறில்வெகு தொல்லையெனப் பகரலாமே. 57

அரக்கர்க்காரிய னாட்சியேழினிற், பரக்கக்காணப் பலத்துமே நின்றிடப், பொருளும்பூமியும் புகல்பன்னியானுள, தருணனேக்கிடி லாமிரண்டேதாரம். 58

புதநின்றபலன்.

புதன்மேடமதில் நட்பாய்பொருந்திநிற்க புகல்சகோதரமூன்றி லொன்றுவிர்த்தி, விதியுடனேமணமுடிப்ப னவாராற்சற்றும் விரும்பு சுக மில்லையம்மான்வர்க்கந்தோடம், எதிரியுமேநட்பாவன் ருண ரோகத் தோ டெழிற்றந்தை யாக்கமெலாமிழந்தேதநின்று, மதிசஞ்சலப்படுவ னாகுமென்று மாந்தீசுர னுரைத்தார் மதிமிக்கோனே. 59

வே று.

மேடமாமதிலேமேதையேயுற்றால் ஓமேவுமோசோதிரமெந்தாய்
நீடுமூன்றாறுக்குடையவனு நிலைசுபனுதலான்மேவுங்
கூடுநற்செல்வங்கீர்த்தியுமுளனாய் குணமுடன்ஜெயமதைப்பெற்று
தேடியமனையும்வாழ்வுமேசிறந்து தேசுறசுகமுமுள்ளவனும். 60

குருநின்றபலன்.

குருமேடமதிற்பகையாய்க்குலவிநிற்கக் கூறுவேதியர்நட்புதந் தைசெல்வன், வருஞ்சுயார்ச்சிதநிலைமைமிகவுண்டாகு மேன்மையதி காரமுளன்மன்னர்கோபந், தருநேயர்பகையாகும்புத்திரயீனந் தரும் பூர்வதலபேதஞ்சனிபார்த்தாலும்,பெரும்புவியிற்புதல்வரிலாதேங்கி மூன்று புத்திரிகட்களிப்பான் றன்பொருட்களெல்லாம். 61

வே று.

வொப்பிலாவொன்பானுதி யுயர்தனுநின்றுநோக்கின்
முப்பதோடாறுமாண்டின் முடிகுவன்ரணத்தாலன்றி
செப்பியசனிதான்பார்க்கிற் சேரிருபத்தோடைந்தில்
இப்புவிவிடுவானென்று யியம்பினர்நந்திதேவர். 62

சுக்கிரநின்றபலன்.

சுக்கிரன்மேடந்திறமாநட்பாய்நிற்க தொழிற்பேதந்திரவாக்கு செல்வவானும், இக்குவலயத்திற்றாயர்க்குத்தூய னினியசுகஞ்சமன் பூமிச்செல்வன்சாது, மிக்கவிருதாரமுளனென்றேவிர்த்தி வேதைக ளத்திரவர்க்கபேதஞ்சத்துரு, தக்கசுகமிலைசாதகர்க்கேயென்று சாற் றினார்நந்தீசர் தரணிவேந்தே. 63

சநிநின்றபலன்.

சனிமேடமதில்நீசமாகிநிற்கத் தலபேதம்வேதனைபூர்வீகநாசம், இனியவித்தைநல்வசனம்புத்திபேதமெழிற்சத்யவான்கெடுதிதொழிவிற்பேதந், தனிபூமியாலும்வர்த்தகத்தினுலுஞ் சாருமேபொருளுந் தான்ருணங்கள்தீரும், நனிமுப்பத்தைந்தாமாண்டி லதிகசெல்வ நாடியேவந்திடுமந்தத்திலன்றே. 64

வேறு.

முப்பதோடைந்தாமாண்டின் மொழிந்திடுஞ்சுகமெவ்வாறு
தப்பிலாரோகத்தோனுந் தபனனேடாயுளோனும்
ஒப்பியேவிருக்கச்செல்வ முயர்நிலமதனிற்பெற்று
வெப்புறுருணங்கள்யாவும் விதிப்படியிருப்பானன்றே. 65

சரந்திரமுபயமா மிராசிகண்முறையே 11-9-7 ஆம் மிராசிகளையும் 1-2-3-4 ஆம் பாதங்கள் 4-3-2-1 ஆம் பாதங்களையுநோக்கும்.

இனி புகலப்புகும் பலனியாவு முக்கியமாய் இராசிகளின்சுபாவமெனுங் காரகங்களையு நோக்குகளையு மாதாரமாகக்கொண்டுஞ் சிற்சிலவிடங்களின்மாத்திரம் கிரகங்களைக்கொண்டு மாதலாலிவற்றையறிவுடையோராய்ந்துணர்வாராக. எவ்வாறெனில் சராசியாகிய மேடத்தின் முதற்பாதமானது கும்பத்தின் 4-ஆம் பாதத்தையும், இது துலாத்தின் முதற்பாதத்தையும் இது சிம்மத்தின் 4-ஆம் பாதத்தையும் இது மேடத்தின் முதற்பாதத்தையும், நோக்கலாலிவ்வோரைகளுக்குரிய பலன்களும் பொருந்துமல்லாமல் முற்கூறியது மினிக் கூறுவதுமாகிய பொதுப்பாடல்களானு முணர்க.

லக்கணத்திற்குறிய நாழிகையை நான்குபங்காக்க ஒவ்வோர் பங்குக்காங் காலத்தையே ஓரையெனப்படும்.

மேடமுதலோரையின் பலன்.

மேஷமுதற்பாதமதிலுதயமானுல் விளம்புகிறேன்தென்வடக்கு வீதியாகும், ஆழமுள்ளகுளங்கிணறுஅருகேநிற்கு மண்மனையிவிரண்டுபுரமிடிந்துகாட்டும், நேசமுடனலயமுந்தெற்கேயாகும் நேர்வடக்கோராலயமுமிடிந்துநிற்கும், பாசமுள்ளவீதியிலேகணேசன் கோயில் மண்பானஆழியுண்டுபரிந்துசொல்லே.

அறிதன்மேடமுதலோரை யவனிதனிலேஜெனித்தோர்க்கு
பிரிதலெதிரிற்சந்துண்டாம் பேதமனைகாண்பெண்பாலாங்
குறியமனையாந்தென்பாகங் கூறுஞ்சந்துமுண்டன்றி
தெரியவடபாற்பெண்குடும்பந் திகைத்தேயிருப்பரெனச்சொல்லே.

பிரந்தமனையோபூர்வீக பேதங்காட்டும்பெலன்ருழ்வே
யிருந்தமனையிலிருபிரிவா மினிதாம்விர்த்தியொருபாகஞ்
சிறந்தேதென்பாற்சயமுண்டாந் தென்மேற்பாகந்தெய்வங்கள்
திறங்காண்பூமிதனைவிட்டு சிறந்தேயிருப்பர்தலபேதம். 67

வேறு.

வருநிலைவடபான்மனைதிரிபாகம் வந்தவரிருவர்காண்விர்த்தி
பெருகியசெல்வந்தானிலைபெண்பாற் பெலனெனவோதுவர்நிலைமை
தருவதுதென்பால்மனையிருபாகந் தரைமிசைவிர்த்தியாமருகிற்
குறுகியசந்துவனைந்திடுமாரல் கொடிமரங்குளமுள தாங்கே. 68

வேறு.

கலைபத்தோன்திரிகோணமாகில்றந்தை கதித்தவர்க்கநான்கெனவேகணிதமோது, இலைவிர்த்திமூன்ருகுமிரண்டேயின்ப மினியசுகமுண்டெனவேயிதமாயோது, விலைபூர்வபேதமதாமாதீனங்கள் விரும்பிநிற்பளிருபாகம்பேதைதானுந், துலைபாகமதில்விர்த்தியாகிநிற்பர் சுயார்ச்சிதமேநிலையென்றுசுகங்கண்டோதே. 69

வேறு.

பொன்னவன்பாக்கியாதி புகல்விறையாதியாக
வின்னமில்லாமல்நிற்க மிகுமனைதென்மேற்காகும்
பன்னியகிழமேல்வீதி பலன்சிங்கபாகவீடு
உன்னியமனையிரண்டி னேரமாமேற்கிற்சந்தே. 70

இப்படிநிலைப்பர்தந்தை யிருவராற்சுயார்ச்சிதங்கள்
தப்பிலைசுகங்களுண்டாந் தரைமிசைபிதுர்க்குயோகஞ்
சொற்படிமுடிக்கவல்லன் சுயார்ச்சிதமனேகபூமி
குப்பெனக்கூடுங்கீர்த்தி குணமுளயோகவானே. 71

சேர்ந்திடுமாதுலாதி சேய்க்கிருபாட்டனுகுஞ்
சோர்ந்திடுமற்றவர்க்குஞ் சுகமிலையிருவர்விர்த்தி
கோந்தபூர்வீகநாசந் திறமதுபெண்ணின்மூலஞ்
சேர்ந்திடுமாதீனங்கள் சுயார்ச்சிதநிலைமைசொல்வாய். 72

ஏற்றியபஞ்சமாதி யதற்குமூன்றுதிமூன்றேன்
தேற்றியநிலையைக்கொண்டு திறமையாயம்மான்வர்க்கம்
போற்றுவரிதற்குபெண்கள் பொருமையாமிரண்டுவிர்த்தி
தோற்றிடுமோண்பால்மூன்று திறமொன்றுநிலைமையாமே. 73

ஆதீனபேதமின்றி ரதெவ்வாறுறையுந்தேவே
நீதியாமரசேகேளாய் நிலையமுவடதென்வீதி
பாதியம்மனைக்குத்தென்பால் பாழ்மனையொன்றுவப்பால்
வீதியுங்கிழமேலாகும் மேற்கிலாலயமுண்டாமே. 74

வேறு.

ஓதியதந்தைகாலமேவிர்த்தியேழுளதிரண்டதில்விர்த்தி
தீதில்லையேகனுந்தனிமைதிறமிலைகுடும்பத்திற்பிதுர்க்கும்
ஆதியிற்சுகங்களற்பமாமத்தியமறிதல்காண்சவுக்கியமென்க
நீதியாய்சுயவார்ச்சிதபுவிமேன்மைநிலையொடுசவுக்கியங்கூறே. 75

வேறு.

இன்பமாமேடந்தன்னி லிடரிலாமுதலோரைக்கி
அன்புடனிப்பலன்க ளரிவதுநிலையாமாக்ஷி
துன்பமொன்றில்லைமூன்று சூழ்ந்திடுமைந்துபத்தில்
தென்பிலாக்கண்டமென்று திறமொடுநிலைமைசொல்லே. 76

கண்டமேஜலத்தாலுண்டாங் கதித்திடும்வசூரிதுன்பங்
துண்டெனுஞ்சுரத்தால்வாந்தி துடிவிஷந்தன்னாற்கண்டங்
கொண்டிடுஞ்சுபரால்மேன்மை குணமெனுமாயுள்விர்த்தி
மிண்டியவறுபதோடு மிகநான்குநிலைமையாமே. 77

நிலைமைதானிறஞ்சிகப்ப னீண்டிடும்வடிவமாகுந்
தலைமையுள்ளவன்றன்காலின் தடைதனிற்மச்சமுண்டாங்
குலமதைவிளக்குஞ்செல்வன் குணமுடையவர்க்குநல்லன்
பெலமுளான்சிவார்ச்சனைக்குப் பெருகியவன்புளானே. 78

வேறு.

தக்கவயதோரைந்திற்கு தந்தைவர்க்கமதிற்கர்மம்
மிக்கவயதோரேழிற்கு வேந்தர்பூமிதனில்வழக்கு
பக்கமனையோயிரண்டாலே பதியில்வழக்குமுண்டாகு
மிக்கபகையாயிருவர்க்கும் மிகவும்விரையமுண்டாமே. 79

வேறு.

யோகமேவயதுபத்தி லுறுஞ்சுகந்தந்தைசெல்வன்
சோகமில்லாமற்செல்வஞ் சுகமனுபவித்திருப்பர்

பாகமாம்பூமிதன்னூற் பலன்விர்த்தியதிகாரங்கள்
யோகவான்யோகிநட்ப னீரொன்பான்சுபங்களாமே. 80

சுபமதுபதினெட்டிற்கு சுந்தரமுள்ளகன்னி
தபமுடையவராற்சேர்க்கை தந்தையின்வர்க்கஞ்செல்வஞ்
சுபமதாய்நற்குணத்தாள் சுதனுக்குண்டாகும்மேலும்
உபயதாரங்களென்று முரைப்பதுமுண்டுதிதே. 81.

நல்லபெண்ணுண்டாமென்றீர் நலமதெவ்வாறுசொல்லுந்
தொல்லைகானேழாந்தானஞ் சுபகேந்திரகண்டந்தன்னில்
வல்லபமாகநிற்கில் வருவதுயேகதாரஞ்
சொல்லுவதன்னைவர்க்கஞ் சுயத்தினின்முடியுந்தானே. 82

முடியுமென்றுரைத்திரையா முடிவதெவ்வாறுகூறும்
வடிவமும்வீதிவீடு வழியுடன்கேளாய்வேந்தே
படிமிசைகடகதிக்குப் பற்றியகீழ்மேல்வீதி
குடிமனைதென்பாலாகுங் குணமுடனிரண்டேபாகம். 83

வே று.

வருநிலைகேள் சுபமுடியுங் காலந்தன்னில் வரும்பெண்ணூற் பேதங்கள்வலுவேயுண்டாந், தருஞ்சுபங்களிரண்டாக முடியுங்காலஞ் சத்துருக்கள் சோரர்களின் றுயரமுண்டாம், பெருகிய மன்னவர் கோபமிவர்க்கரிட்டம்பெலயீனஞ்சுபமுடிந்தபின்பிவ்வாறு, குறுகிய பந்துக்களின்பெண் வர்க்ககர்மங் குணமாகப் பெண்வழியிற் குறிப் பைச்சொல்லே. 84

வே று.

பன்னியவயது பதினெட்டுக்கப்பாற் பார்தனிற் பூமியால் விர்த்தி, மின்னியதிருப தாண்டினி லன்னை விகல்பமாய் பகையது காட்டும், உன்னியதிருப தோடனேந்தி லுறுதொழில் வாணிபத்தாலே, மன்னியமறையோர் மகிழ்ச்சியாங் கீர்த்திவளமொடு சவுக்கியமாமே.

வே று.

நவிலுவேன் தானத்ததிபர் பலனதையுங்கேளாய் நல்வாக்கு சத்தியவா னலமுடையவித்தை, தவறிலர வாக்குடைய சற்சனர் கணேசன் சஞ்சலத்தன் மனமுறுதி சர்வசனப்பிரியன், புவிதனிலே மித்திரனுங் குடும்பந்திரண்டு புண்ணியத்தில் விரையமுளன் மிகு சுயார்ச்சிதமாம், புவிமன்னர் மகிழ்ச்சியுளன் குடும்பத்துட்செல்வன் குணமுடைய னெனவுரைப்பர் குறியிதுகண்டோதே. 86

வேறு.

விதமுறுமூன்றும்பாவம் விபரங்கேள்விளையும்விர்த்தி
பதமுறுஞ்சோதிரங்கள் பலனைந்துவிர்த்திமூன்று
கதையுறுஞ்செல்வமுண்டாங் கன்னியவிர்த்தியொன்று
சிறைவிலையிதுதான்விர்த்தி திரமதங்குண்டாங்கூறே. 87

வேண்டியநான்காமாதி விந்தைகேளன்னைதோடம்
மூண்டிடுமிருபத்தைந்தின் மிக்ககண்டங்கள்சொல்லுந்
தாண்டியேபோகுங்கண்டந் தரைமிசைமுப்பத்தைந்திற்
தூண்டியகர்மகண்டஞ் சொல்லுவர்நிலைமையீதே. 88

அரியவாகனங்கடானே யறியக்கேள்சகடையென்க
தெரிவதுபூமிசேர்க்கைச் சிறந்திடுமனைகளுண்டாம்
பிரியமன்னவர்கள்பேட்டி புதுநகரத்தில்வீடு
முறிபடுந்தந்தைவர்க்க முற்றிலுஞ்சுகங்கடாழ்வே. 89

வேறு.

ஐந்தினைக்கொண்டம்மான்வர்க்கமறிவதவனியில்தநயர்கடானே
முந்தியபுத்திரனைந்துளவதனில்மேன்மையாய்விர்த்தியொன்றே
சந்ததிபெண்பால்மூன்றதுவிர்த்தித்தலமதிற்சௌக்கியமென்க
சிந்தையிற்பேதமுடையவன் தர்மசிந்தனையுடையவன்காணே. 90

வேறு

ஆரிடத்ததிபர்தன்னை யறிவதுபுந்திகோணஞ்
சேரிடம்ரோகமுண்டு திறமைகாண்ரொணங்களுண்டாம்
கோறியசத்துருநாசங் கொடியவர்கூடிப்பார்க்க
பேரிதுசோரராலும் பெருவிறையங்களுண்டாம். 91
எழாமாதிபலன்கேளேகதாரங்காணிடரிலையோகமேகாட்டுந் [ன்
தாளாதுகளத்திரவர்க்கத்தின்மேன்மைதரைமிசையோகனேயாவ
பாழாகுங்களத்திரவர்க்கத்திற்பூர்வபலமிலைசுயார்ச்சிதநிலையாந்
தாழுமேபுத்திராற்பமாமினியன்தரணியிற்களத்திரசுகமே. 92

வேறு.

அட்டமத்ததிபர்பலனதையறியவரிட்டங்கள்மத்தியிலுண்டாந்
திட்டமாய்வயதைந்தேழினிற்கண்டந்தீர்க்காயுளறுபத்துநாலிற்
பட்டெனுங்கண்டஞ்சுரத்தினலரிட்டம்பாலர்க்கேயாமெனவோதுங்
கட்டெனுமன்னைவர்க்கத்திற்சுபங்கள்கருதவும்பயனிலையன்றே. 93

பாக்கியபலன்கேள் தந்தையின்சுகங்கள் பலனதுபூர்வமேநாசம்
தூக்கியபாபிபார்வையாற்சுபங்கள் துற்பலயீனமேயாகுந்
தாக்கியதந்தையாதீனமிரண்டுதரணியிலுதையத்திலுரைத்தோம்
வீக்கியமனேயோபேதமாந்தந்தைவிரும்பியபலனெலாஞ்சுகமே. 94

சுகமதுதந்தையாதீனங்கீழ்பாற்சுயார்ச்சிதநிலையதுமேல்பால்
அகமதுவிரண்டுமனேயென்பரதிலே யரிவதுபெண்வழக்குளது
மிகவுங்கேந்திரத்தான்சுபரொடுகூடிவிகல்பமில்லாமலேயிருக்கில்
அகமதுபிரிவோவிரண்டெனலாகுமாரலால்வழக்குளதாமே. 95

வேறு.

பத்ததிபர்பலனெவ்வா றென்னிற்பத்தோர் பற்றியகேந்திரமதிலே பலமாய்நிற்கிற், சித்தநலம் வியாபாரம் பூமிதன்னாற் சிறந்ததொழிலுண்டாகுந் திறமைகேளாய், உத்தமன்காண் கர்மமதுஉறுந்தந்தைக்கு உடனன்னேதோஷமதா முணர்வாயோதும், விர்த்தியாமுப்பதுட னென்றிற்றந்தை மிகக்கண்டம் மாரகங்கள் விரிவாய்ச்சொல்லே. 96

சீர்கொளிலாபாதிபதி பலன்கேள்மேன்மை செய்தொழிலிலாபமவன் றிசைவருங்கால், ஏற்கொள்மேற் றிசையிற்பிர யாசையோடுமினியலாபங்கலகஞ் சோரராலே, பார்கொள்பெரி யோற்களினாற்சாபஞ்சேரும், பகருவதெவ்வாறென்றாற் றந்தைமிக்க, பேர்கொளாலயத்தை கெடுத்ததினல் மிக்கபெண்கலகங் குடும்பசஞ்சலமுமுண்டாம். 97

வேறு.

ஓதியசகோதிரங்க ளூற்றலாபத்துநான்கு
மீதியாஞ்சகோதிரங்கள் மிகவைவந்துநிலையேயாகும்
பாதிநாள்விர்த்திமேன்மைப் பலனெனச்சொல்வரின்னஞ்
சோதிக்கவிர்த்திமேன்மை சுகமெலாம்விரையமாமே. 98

விரையாதிமன்னனுக மிக்ககர்மாதியொன்பான்
தரைமிசைகட்டடங்க டனிமையாங்கலகிவீடாம்
பிறர்நிலைகட்டடங்கள் பெலயீனங்தென்கீழ்பாகங்
குறைவதிலுண்டுபெண்பாற் குடும்பத்திற்கலங்கிநிற்பான். 99

மேடமுதலோரை முற்றிற்று.

மேடமிரண்டாமோரையின் பலன்.

மேஷமென்ற லக்கணந்தா னிரண்டாம்பாதம் விளம்பியதோர் கிழ்மேலாம் வீதியாகும், பாசமுள்ள குளம்கிணறு யெதிராய்த்தோன்றும் பரிவானவாலயமும் வாயுவக்னி, நேசமுடன் நேர்மேற்கில் சூழியொன்று நின்றதெற்குவடக்குமோர் சூழியாகும், ஆசையுடனடுத்த மனை பாழதாகு மதற்கடுத்து பின்னமென்றே யறியலாமே. 100

அரிவதுமிரண்டா மோரையின்பலன்கே ளவனியிற்கீழ்மேலாம் வீதி, தெரிவதுமுகப்பு தென்முகமெதிற் சிறப்பிலைமனையதுபாழாங், குறுகியுசந்து மருகினிலாரல் கொடியவர் மனையுண்டாமெதிரில், முறிவிலாபூர்வந் தன்னிலேபிறப்பர் முடிவின்னஞ் சொல்லுவன் கேளாய். 101

வேறு.

ஆடதிலிரண்டாமோரைய வனியிற்ஜனித்தபேர்க்கு
வீடதுதென்முகப்பு விளக்கமேயெதிரில்லலங்
கூடியதிரண்டுபாகங் குணமிலைமேல்பாற்சந்து
நீடியவாசலுண்டாம் நிலையிருபக்கந்தாழ்வே. 102

தாழ்வதாங்கீழ்பாகத்திற் றனித்திடுமனையோபேதம்
வாழ்மனையொன்றுமேல்பால் வரும்பாதியதிலேயீனம்
பாழ்மனையப்பாலொன்று பலத்தினையரியக்கேண்மோ
சூழ்பவமில்லைபூர்வத் துடச்சியிற்பிறந்தோன்றனே. 103

வேறு.

மைந்தனேகேளாய்மதிகேந்திரத்தில் வருவர்காணுனதாற்பலன்கள்
விந்தையாந்தந்தைவர்க்கத்தில்மூவர் மிகுமூன்றுங்காலத்திற்பலன்க
முந்தியபிதுர்கடனில்விர்த்தியிரண்டு முற்றிலும்பாகமேயில்லை [ள்
சந்ததிதந்தைகாலத்திலேமூ தனித்திடும்விர்த்தியில்மூன்றே. 104

வேறு.

வந்ததந்தைகாலத் தவரினேகன்றனித்திருப்பான்
சொந்தமனையோவாதினஞ் சுயவார்ச்சிதமோநிலையிரண்டா
மைந்தன்றனக்கேயன்னைவர்க்க மதிக்கும்பாட்டனுன்கென்பர்
விந்தையாகவம்மான்கண் மிக்கவிரண்டாமெனவோதே. 105

அம்மான்கணிலை யெவ்வாறென்னில்வீதி யதுகீழ்மேலாகுமிது பிரிவுமூன்றுந், தம்மில்லமிருவிதமாந் தந்தைசெல்வந் தானம்மான் றனக்கில்லை தலமேபேதம், யிம்மனைக்கிக் கீழ்பாகமிடமிரண்டாயின் பமிலையாதின மிடராய்ப்போகும், அம்மனையேசுயார்ச்சிதமாம் வடபாகத்தி லமர்ந்திருப்பரெனவோதுயவனிமீதே. 106

வேறு.

கருதுமிப்பலன்கள்கணிதமாய்வரிலோ களிறுமேடம்மிரண்டங்காற்
பெருகியவோரையென்பதுநிலேயே பெலனெனன்பாஜாதகர்தனக்கு
வருநிலைசொல்வோம்ஜன்மாதிமதிக்கு வருங்கேந்திரகோணமாகிடிலோ
தருஞ்செல்வந்தந்தைகாலத்திலென்கதண்மைநற்குணமுடையவனே
ஜாதகர்தனக்குநிறம்பொதுவாகுந் தரணியிற்சமவுருவுளனும்
பேதகமில்லான்கீர்த்திசெல்வீகன் பெலன்மூன்றிலேழினிற்கண்டம்
பாதிநாள்தந்தைசுகமிலேவயது பற்றியதேழுக்குச்செல்வம்
ஓதியவன்னைசுகமதுயின முறுஞ்செல்வமீரைந்தினுண்டே. 108

இலக்கணப்பலன்களின்னவாறிரண்டா மிடப்பலனிருவித்தையுளனுந்
துலக்கியமன்னர்மகிழ்வித்தைமந்திரி சொற்பிரட்டுள்ளசாதுரியன்
விலக்கியபூமிதிரவியமெல்லா மேதினிதனிலிருவருக்குங்
கலக்கமாய்வழக்குதனில்விரையங்கள் கதித்திடுஞ்சஞ்சலங்காணே.

மூன்றுதிபலன்கேள்மூவரேவிர்த்தி முதிர்ந்திடும்விர்த்தியிலிரண்டு
தோன்றிடுங்கர்ணபூஷணம்விர்த்தி சுகமெனலாகுமிப்பலனே
மூன்றுதிமூன்றேனின்றதைக்கண்டு முடிவுடன்பலன்சொலன்றியாவும்
ஈன்றளித்தழிக்குமீசனுர்மொழிகொண் டெந்தையாம்நந்தியேயுரைத்தார்.

வேறு.

நலமுடையநான்காதி பலன்கேளன்னை நன்குடையநாலாண்டிற் கண்டமுண்டாம், பலமுடையவர்க்கத்தாற் சுகமுமுண்டு பற்றிய தேள்துலேநண்டில்மனைகள்நிற்கும், நிலேயுண்டாமண்மனைகள் விர்த்தி யென்பர் நேசமுடன்பலர்பூமி நியமாய்ச்சேருங், கலேமுதல்வித்தை கள் கற்பன்மிக்ககாமிகனத்த வாகனசுகத்தனுகுமன்றே. 111

அறிவதுமைந்தாமிடப்பலனேந்தோ னம்புலிக்கைந்தினைக்கொண்டும்
பிரிவுடனம்மான்பெலமுடனேந்து பேசுவர்நிலேயதின்மூன்று
கரியவர்பாபிபார்வையுண்டாகிற் கதித்திடும்விர்த்தியிலிரண்டே
தெரிவதுபூர்வமில்லேகாணன்னிய தேசமேசிறந்திடவாழ்வான். 112

வேறு.

அரியவைந்தினுக்கைந்தாதி யவரொடுசுபர்கள்பார்வை
பரவியேயிருக்குங்கண்டீர் பலனதைக்கொண்டுபுத்ரன்
விரவியதொன்றுவிர்த்தி மிக்கபெண்ணிரண்டேயாகுந்
திரமதுநிலேமையொன்று திறங்கண்டுநிலேகேளாதே. 113

ஆறுதிபலன்கேள்ரேக மறைவதுநிலேகளில்லே
நீறுகும்ரொணங்களில்லே நிலேயில்லேசத்துருக்கள்

னாருகும்பெண்ணுற்றுன்பந் துடச்சியோயில்லையென்க
போரதநிலைகள்விட்டு பெலமுடனிருப்பரன்றே. 114

இன்பமாயேழுக்கேளோ னினியகோள் திரத்துளேழு
துன்பமொன்றில்லைதாரஞ் சுதனுக்குயோகமென்க
அன்பொடுசுகவான்செல்வ மடைவதுகளத்திரத்தால்
இன்பமேபொருள்கள்பூமி யினியதாயனுபவிப்பான். 115

வேறு.

எட்டிடந்தன்னு லினியநற்பலன்க ளிடரிலாதரிவது நிலைகேள், திட்டமாய்வயது முப்பதின்மூன்றிற் றெரிவையாற் கண்டமொன்றுளது, வட்டமாயன்ப தோடிரண்டதனின் மரித்திடுங்கண்டமே யுளதாங், கட்டமாங்கண்டம் விஷபீடையதனுற் காணுமாரக மெனச்சொல்லே. 116

சொல்லியதொன்பான் சனிமதிபார்வை சுகமுடனிருந்தகாலத்தில், வெல்வதுபிதுர்க்கு யோகமேசிறப்பா மேதினிதனிலதிகாரி, தொல்லைகாண் பிதுர்க்கைந் தேழெனுமாண்டிற்றுடர்ச்சியாங் கண்டமேயுளதாம், இல்லைகாண்வயதோ ரிருபதோடைந்தி லினியதந்தைக்குமேகண்டம். 117

கண்டங்களெவ்வாறென்னிலோவறிதல் காரியின்றிசை தனிற்செல்லல், மிண்டியநிலத்தாற் கண்டமேகாட்டு மிகுசுபர்பார்வையே யாகிற், கண்டிடகண்டம் நிவர்த்தியாமன்றி கழறுமாடிருபதோடேழிற், துண்டெனுங்கண்ட மாரகமென்று சொல்லினர்நிலையிதுகாணே.

வேறு.

பரவியபத்தாமாதி பலனெவ்வாறென்னிற்பத்தோன்
நிரவியதிருட்டியாக நிலைவாணிபங்கள்பூமி
குறைவில்லைசெல்வங்கீர்த்தி குணமொடுநான்குகர்மந்
திறமொடுதர்மசிந்தை சிவாலபமுடிக்கவல்லன். 119

வேறு.

அரியலாபாதிசுபர்களின்பார்வை யாகிடிலாபமேபதிகம்
பரிவொடுபத்துள்பத்தாதிகேந்திர பலத்தினுற்ஜாதகன்றனக்கு
விரிவதாந்தொழில்கள்விர்த்தியாம்லாப மிக்ககோள்சுபமெனலாகுந்
திரவியங்கிழக்குமேற்கினிற்சேருந் திறமெனச்சொல்லிடுவாயே.

விரையாதிகோணமாகிடிற்செல்வ மிகுத்திடும்யோகவானெனக
தரைமிசைச்செல்வஞ்சிறந்திடுஞ்சுகமே தரணியிற்கீர்த்திமானுகுங்
குறைவிலைகுடும்பத்திற் சுயாற்சிதங்கள் குணமென வனுபவமுறை
செய், மறைவிலைதெய்வசிந்தனைமிக்க மன்னவர்கணட்புளனுமே. 121

மேடமிரண்டாமோரை முற்றிற்று.

மேடமூன்று மோரையின் பலன்.

குறியதுமூன்றும்பாதம் கூறுவேன்வடக்குதெற்கு
சரியிருபுரமும்பாழாம் சாற்றினேம்தனித்தவீடு
யெரிகன்னிமாயீசன்காவி ருக்குமேகுண்டன்கோவில்
அரிந்திடுமம்மன்சாத்தா ஆக்கினேயதற்குண்டாமே. 122

இன்பமாமேடமூன்றெனுமோரை யியல்புடன்ஜனித்த ஜாதகற்குத், துன்பமொன்றில்லை பிரிவுமூன்றுள தாய்த் துடர்ந்திடும்வீதியங்குள தாம், அன்புடன்வடக்கு முகப்பதில்லமதா மறிவதினை திர்மனையழிவா, மன்னவனருகிலுள மனைபாழாம்வந்திடும் பூர்வீகமாகும்.

வேறு.

மறிதநின்மூன்றுமோரை வருஞ்சாதகர்க்குவீதி
தெரிவதுகீழ்மேலாகுஞ் சிறப்பில்லையெதிரில்வீடு
குறியுளகோயிற்கீழ்பாற் குளமெனவாகுமன்றி
அருகினிலிருக்குமவ்வீ டபவிர்த்திமனைகளாமே. 124

ஆதீனபேதமென்ப ராதீனந்தென்பாலாகும்
வீதிதென்கீழ்ப்பாகத்தில் விளங்கியமரந்தோப்புண்டு
சோதிக்கக்கன்னிபாகஞ் சொல்லம்மன்கோயிலுண்டாம்
பேதிக்கமதியைக்கொண்டு பெலனிவ்வாறென்றுகூறே. 125

திருந்தியமூன்றுமோறை திரமாகிலிப்பலன்கள்
பொருந்தியேயிருக்கச்செல்வம் புகலுவராயுள்விர்த்தி
வறுமறுபத்தோடொன்று வலுவுடனிருப்பன்செல்வன்
தருஞ்சுகமத்தியிற்றுன் சஞ்சலமடைவானன்றே. 126

நெறியுடன்சிவந்தமெய்ய னேசவான்தர்மசிந்தை
குறியுளன்சமமாந்தேகங் கோதையர்பகையுள்ளோனுந்
தெரிந்திடில்பிதுர்க்குமேலான் தேரியதெளிந்தொர்கூட்டம்
அரிந்திடுந்தரையிற்கோவி லதிகாரச்செல்வமுண்டாம். 127

வேறு.

தோன்றும்வயதுபத்தினுக்குச் சுகமாய்குடும்பவிர்த்தியுண்டாம்
ஈன்றதந்தைவர்க்கத்தி வினியகர்மந்தான்முடியுஞ்
சான்றவன்னைதந்தைக்குத் தலைமைகர்மந்தனைசெய்வன்
மூன்றுண்டப்பாலோராண்டின் முடிவாந்தந்தைகர்மமுமே. 128

கண்டமுண்டாமிரண்டாதி கதித்தவுபயகிரகங்கள்
கொண்டேவிருப்பர்வித்தையுளன் குணவானன்யபாஷையுளன்
விண்டேயிருப்பன்மனைபாதி விரையங்குடும்பமெனவோதுந்
துண்டாயந்தனிலேதனிலே சுகித்தேயிருப்பனெனச்சொல்லே. 129

சொல்லுமூன்றுமாதிபலன் சுகவானிளையோர்தானற்பம்
வெல்லுவிர்த்திநிலையொன்றும் விவேகிசுகவான்மேன்மையுளான்
தொல்லையிலைகாண்பூமிதனஞ் சுயார்ச்சிதத்தினிலையுண்டாம்
எல்லைதனிலேவன்னியமா யிருக்குந்தெய்வந்தனைப்பணிவான். 130

பணிவனுன்காமாதிபலன் பலவான்சகடவாகனத்தன்
மணிபொன்முத்துவியாபார மன்னர்மகிழ்ச்சியுளனுகும்
கணிதமுடையவித்தையுண்டாங் கன்னிவிழியிற்சுகமுடையன்
அணியுமாடைமிகவுடைய னழகுமனையாமதிசெல்வன். 131

வேறு.

ஆழ்வதினைந்தாமாதி யாவருபயங்கணட்பாய்
சூழைந்துக்கைந்தாமாதி சுகமதம்மானுமேகன்
வாழ்மனைவிர்த்தியென்பர் வடமனைகீழ்மேல்வீதி
தாழ்வதிலில்லையம்மான் தந்தைக்குமேலாமியோகன். 132

யோகமேசாதகர்க்கோ ரைந்தெனுமாண்டின்மேலாம்
பாகமுஞ்சுயார்ச்சிதங்கள் பலத்தினையடைவானம்மான்
வேகவான்குடும்பத்துள்ளே மிகுந்ததர்மங்கள்செய்வான்
சோகமில்லாதான்மிக்க தேவாலயங்கள்செய்வான். 133

விதமுருஞ்சாதகர்க்கு வித்தைமேன்மையுமுண்டாகும்
உதையபுத்திரரிரண்டா முற்பவமேழுண்டாகும்
பதமிலையிரண்டுபெண்ணே பாலர்க்கிவ்விதமேசொல்லுங்
கதையுறுஞானகேழ்வி கருத்துளன்யோகவானே. 134

வேறு.

சத்துருதானப் பலனெவ்வாறென்னிற் சலகண்டஞ் சாதகர்க்குண்டாம், மித்துருபகையாம் ரோகமேயுண்டு மிகுத்திடாரோகமாமென்க, பத்திருபத்தேழாண்டுமே ரொணத்தாற் பகையுளனுகியேயிருப்பன், சத்தியவசன முள்ளவன்தருமி சஞ்சலபுத்தியனுமே. 135

ஏழிடமதனிற்பாபிகள்சகித மிருப்பதாற்களத்திரமுபயம்
வாழ்வதுவிர்த்தியேகமாமிளையாள் வலுவொடாயுளுமிகுதீர்க்கந்
தாழ்விலைதெற்கிவிதின்முதற்றூரந் தனித்திடும்வீதிதென்வடலாஞ்
சூழ்மனைமேல்பாலெதிரினிற்சந்துசொல்லுவர் தெற்கிலாலயமே.

வேறு.

களத்திரதந்தைசகோதரமிருவர் கன்னியேயொருத்தியென்றேது
வளத்தியாமனைகள்குடும்பமேவிர்த்தி மன்னர்கணட்புளனுகுந்
தளப்படும்பூமியாதீனபேதந் தென்திக்கில்சுயார்ச்சிதமுண்டு
குளத்துடன்வடமேற்காகிடுங்கோயிற்கொண்டிடுமின்னிலைப்பலனே

சிரந்தசகோதரனென்றும் பெண்ணேமிக்க திறமிரண்டுநிலை யென்பர் சேர்க்கையைந்து, பிறந்தமனையினமதா நிலையிவ்வாறு பின் களத்திரநிலையோ வடகீழாகும், அறிந்திடக்கேள் கீழ்மேலாம் வீதி யாகு மதின்தென்பால்வீடாகு மறியக்கேளாய், சிறந்தமனையிருபாக மொருவர்நட்பு சிறப்பிக்குமெதிர்த்தமனை தீதாமன்றே. 138

தீதாகுந்தந்தைசகோதரமேமூன்று திறமென்கச்சகோதரனே யேகனுகும், வாதாகுந்தந்தைசுகமாதீனங்கள் வலுவுடனேநிலையி ரண்டு மகிழ்ச்சியுண்டாந், தீதாகுங்குடும்பம்பின்செல்வமில்லை சிறந்த மனைபாதியதிற் பாழேயாகும், ஓதியதிம்மனை தனக்கு வடபாகத்தி லுற்றகங்கையாலயமென் றோதிடாயே. 139

சரமதையுபயத்ததிபரேபார்க்கதாரமீரெட்டினுக்கப்பால், உறு மதுயோகவாண்டினிற் சுபமாமுதுமுப்பதோடடனேழிற், குறைவ தாந்தாரமுபயதாரத்தைக் குணமொடுசுபமதைமுடிப்பன், மறை விலையிரண்டாந்தாரத்தின் புத்திரன்வலுவுடனிலைப்பனென்றோதே.

வேறு.

இன்பமாமெட்டாமாதி யினியகோளுபயராசி
துன்பமில்லாதார்பார்வை சகமுடனிருக்கின்றனே
தென்பொடாயுள்தீர்க்கந்தான் திரமதுமத்தியகண்டம்
அன்பொடுமூன்றான்பானி லரிட்டம்வந்தகன்றுபோமே. 141

வேறு.

பாக்கியபலன்கேள்பிதுர்சுகமறிதற் பற்றியசெல்வமேமுன்னல்
தாக்கியசுகங்கள்மத்தியிற்பேதந் தரைமிசைச்சாதகன்யோகன்
நோக்கியமனையாதீனமேயிரண்டு நேர்ந்திடும்பூமியால்விரையஞ்
சோக்கையேயில்லையீனமாந்தந்தை சிறந்திடுஞ்சுகமெலாம்போமே.

தலமதிற்சுயவார்ச்சிதபுவிபொருளுஞ் சாதகாவயதிருபதிலாம்
பலருடைபொருளினுதவியாற்றருமம் பண்ணுவனலயமொன்று
நலமதாங்கங்கைக்கயமுண்டாம்விர்த்தி நண்ணிடுமுப்பதாமாண்டிற்
கலகமொன்றில்லையன்னியபூமி கன்னியின்வழிதனில்வருமே. 143

பத்ததிபதியின்பலனெவ்வாறென்னிற் பலமுடன்சீவனம்புவியில்
நித்தியமலைதலுண்டதிலரசர் நிலைதனில்விறையமங்குளது
சித்தியாந்தெய்வபத்தியங்குளனுந் தேறுமாலயங்களின்விரயம்
யுத்தியுமுடையனரசரால்மகிழ்ச்சி யுறுதிகாணிப்பலனுமே. 144

கூடியலாபத்ததிபதிபலன்கேள் குணமொடுதொழிலதாற்செல்வன்
நீடியவிர்த்திபூமியாற்செல்வம் நிலையொடுகாரியஜயத்தன்
சூடியதிசையேமேல்வடமேற்கு சொல்லுவர்நிலையிதுவோதுந்
தேடியலாபவிர்த்தியாமேன்மை சிறந்திடுநிலையெனலாமே. 145

விறையாதிபலன்கேளிதிற்சுபமதனுன் மிக்கநல்விறையமேயாகுங்
குறைவிலமனைகளிரண்டிடமதனிற் கொள்வதுநற்பதவியுமாம்
நிறையொடுசெல்வந்தொழிலதில்விறையம்நிசமெனச்சொல்லுவதன்
நிறைவதாநேத்திரமதிலொருபேத நேமியாமச்சமங்குளதாம். [றி

மேடமூன்றுமோரை முற்றிற்று.

மேட நான்காமோரையின் பலன்.

தகரதில்நாலாம்பாதந் தன்னிலேஜனனமானல்
புகரதில்கிழக்குமேற்கு புகன்றிடுந்தெற்குவாசல்
மகரசிங்கத்திற்குண்டம் மாகோவிலுண்டுதோப்பு
இகர்துலாமேடம்சத்தா னிருக்குமேகுண்டந்தானும். 147

வேறு.

கண்டிடல்மேடநான்கெனுமோரை கணிதமாய்ஜனித்தசாதகர்க்கு
மிண்டியவீதிகிழ்மேலா மருகிலிருந்திடுந்தென்வடல்சந்து
அண்டியகிழக்குமுகப்பதுவீடா யமர்ந்திடுமருகினிற்பாழாங் [மே.
துண்டெனுமெதிரிலுளமனை விர்த்திசொல்லுதென்கிழக்கினிற்குள

தெரிவதாமந்தவோரையிற்சனித்தோன் தென்வடல்வீதிகிழ்முகப்பு
பிரிவதாமருகில்வடபக்கஞ்சந்து பெலமுளவீதியின்துடர்ச்சி
அறிவதுநிலைகேளாலயமேல்பா லாக்கினைதிசைதனிற்கங்கை
குறியதிலிரண்டுபக்கமும்விர்த்தி குணமிலபெண்ணனுபவமே. 149

எதிரினின்மனையோயிருவிதமொன்று யிடரருகினிற்சந்தாமால்
மதிதனக்கேழுக்கேழுடைபாபி வலுவதால்வருமிவனுக்கு
புதியதாமனைகள்கட்டடபேதம் புவிமன்னர்கட்டடமாகும்
பதிதனிலிவ்வாறருகினிலிருக்கும் பலனெனவனுபவமுறையே. 150

இலக்கணப்பலன்கேள்மத்திமவயது யிடாதுமாதமொன்பதிலே
கலக்கமாய்கண்டமாண்டிரண்டிற்கு கதித்தமாரகமென்பர்துன்பந்
துலக்கமாஞ்சுகங்களீனமாந்தந்தை சுயார்ச்சிதநிலைதனிலீனம்
வலுத்திடுந்தந்தைவிர்த்தியேமூன்று வர்க்கமாமேகன்றுனிலையே.

நிலையம்மானிருபாராகுமேசெல்வம் நிலையொடுசுயார்ச்சிதமதனில்
தலைதனில்ரோகமுடையவனம்மான் தனியனுமன்னியதேசம்
பலருடன்கூடிவர்த்தகமதனுற் பலசீவனங்களால்விர்த்தி
நிலையினிலேகன்விர்த்தியாமிதுவே நிலையென்பரிப்பலனுமே. 152

மேடநான்காமோரை முற்றிற்று.

கடல்சூழ்ந்த நெடிய விவ்வுலகத்தின்கண் கணிப்பவருஞ் சோதிடருஞ் சாத்திரமு முளவாயினு மதனை பிறருக்குப்பயன்பட வெடுத்தோதாது தம்மளவேயாக மறைத்துத் தாமு மறைந்து போகின்றதே நந்தேசத்தினர் இயல்பாயுள்ளமை யாவருக்கும் தெரிந்தவிஷயமே. ஆங்குயானுஞ் சென்ற முப்பதாண்டும் முயன்றரிதின்பெற்ற விவ்வரிய நூலை மறைத்துவைத்து வாளா மறைந்துபோதாதெல்லோருக்கும் பயன்பட வெளியிடுவோமெனக்கருதிப் பன்முறை முயன்றும் பொருந்தாமையாலுமன்றி முன்னம் பலபேர் தம் சாஸ்திரத்தைப் பலவாறுக் புகழ்ந்தெழுதி விளம்பரப்படுத்தி வெளியிட்டபின்னரதனை நோக்கினரியாரும் விரும்பலாயின வாங்கிதனையு மெண்ணியிகழாவண்ணமுந் தஞ்சந்தேக நிவர்த்தியாமுன் வீணே பொருள் விறையஞ் செய்யாவண்ணமு மிந்நூலை யொருங்கே யச்சிடாது பிரதமத்திலறியவேண்டிய முக்கிய வாதாரமாகிய சிலவற்றேடுமுதற்பாக மாத்திரம் அச்சிடலாயிற்று மற்றவையும் 3-4-லக்கணங்களாகச் சேர்த்து அச்சிடப்படும்.

துவாதசலக்கினத்திற்குப் பொதுப்பலன், திசாபுத்திபலன் கோசரப்பலன், ஆரூடபலன், தினப்பலனும் இவைகளையும் பின்னுல் ஒரே பயிண்டாகச் சேர்த்துக்கொள்ள அனுகூலமானவிதமாய் அச்சிட்டுவரப்படும்.

இந்நூலிதுவரையிலும் வெளிப்படாத மிக வாச்சரியகரமான பலன்களடங்கிய பாக்களாயிதை வாசிக்கும் சோதிடருக்கு மேனையோருக்கும் அளவிடற்கரிய சந்தோஷம் விளைவிக்குமென்பதில் ஐயமிராதென்ப தெனக்குத் திண்ணந் திண்ணம். ஸ்திரீ சாதகமு மிவ்வாறே சொல்லப்படும்.

நந்திவாக்கியம் முற்றுப் பெற்றது.